உ

சிவமயம்.

சிவகணபதிதுணை.

மறைசைப்பொய்யாவிநாயக தோத்திரப்பாமாலை.

பறங்கிப்பேட்டை

ஸ்ரீ-ஆ-முத்துத்தாண்டவராயபிள்ளை

அவர்களியற்றியது.

இஃது

ஷை விநாயகராலய தருமகர்த்தரும்

ஸ்ரீகவி - குமாரசுவாமி செட்டியாரவர்கள்

புத்திரருமாகிய

ஸ்ரீமான்-கவி-குருசாமிசெட்டியாரவர்கள்

காருணிய திரவியோபகாரசகாயத்தால்

சென்னை,

ஸ்ரீ மஹா லக்ஷ்மி விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1901.

அச்சிடுவிக்கப் பொருளுதவிசெய்தார் சிறப்பு.

உலகுபுகழ் பிறையாற்றிற் பொய்யாத
விநாயகனா ருயர்பா மாலை
திலகமெனும் புலவர்குழாங் கொண்டாட
வச்சியற்றிச் சிறப்புற் றாரால்
நிலவுபுகழ்த் தருமகர்த்தர் மிகுசேனைத்
தலைவர்குலம் நிலைத்த பண்பர்
அலகிலறம் வகுத்தாற்றுங் குருசாமி
செட்டியா ரான்றோர் மாதோ.

/

உ

சிறப்புப்பிரம்.

மேன்மாதூர் ஜனசேகரர்
பிரயஸ்ரீ கோபா[illegible]ாரியாரவர்கள்
இ[illegible],

திருவளர் கமலஞ் [illegible]ாம்பல்
மருவுயிர்த் தலர் [illegible]னஞ் செழிப்பப்
பிறையா றுத் [illegible]லாற் பெரியோர்
பிறையா றென் [illegible]ய நகரிடை
நவமணி கொ[illegible]ளி யதனி
லவமார் பிறப்பி [illegible]ண் டஞ்சிக்
காவெனக் கருதிக்[illegible]தி லிருத்திப்
பாவினம் பாடிப் பணிவா ரமக்கு
மெய்யா யளித்தமர் விழுமிய குணத்துப்
பொய்யா விநாயக னென்னப் புகலுங்
கரிமுகன் றனக்குக் கனிசுவைத் தமிழி
னிருபா விருபஃ தியற்றித் தந்தன
னன்னவன் யாரெனிற் பன்னுவன் கேண்மதி
யமைவுறக் கற்ற வழகிய சுகுணன்
கமையே யுருவா யமைந்த கருத்தன்
கற்றவர்க் கெல்லாங் கண்டென வினிப்போன்
பற்றுமெய்த் தவத்தோன் பறங்கிப் பேட்டை
யத்தல மியற்று மருந்தவன்
முத்துத் தாண்டவ ராயமூ தறிஞனே.

யாழ்ப் [illegible] து நல்லூர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறு [illegible] ாவல [illegible] ர்கள்

[illegible] து.

சுத்தபர சிவமாதி [illegible] பின்னமாய்த்
தோற்றமில [illegible]
துய்யசுரு திச்சிரப் [illegible] ருபமாய்த்
தோமிலா னந்தமய [illegible]
பெத்தமல பசுவகையி [illegible] ர்மையசம்ப்
பேச்சிறந் தறியுமறி [illegible]
[illegible] ஒ முதல்சாத பரிவடிவமாம்
பேசிடவு [illegible] றபொருளே
பத்தானு தினம்வந்து மெய்த்துதிகள் பாடிடப்
பங்கயன் மால்வணங் கப்
பார்புகழு மாடமலி பிறையா றெனுந்திருப்
பதியிடங் கொண்ட பரனே
புத்தமிர்த வெள்ளமே பொய்யா [illegible]
பொய்மார்க்கர் வஞ்சவினை யைப்
பொடிபடுத் துன்னடியர் திருவடித் தொண்டடிமை
பூணநல் லருள்பூத் திடே.

3-1606

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்

மாணாக்கரும்,

சேதுபதி மகாராஜா அவர்கள்

சித்தாந்த வித்தியாசாலைத் தலைவருமாகிய

ம-ா-ா-ஸ்ரீ சிதம்பரம்-கந்தசாமிப்பிள்ளையவர்கள்

இயற்றியது.

பொன்பூத்த செஞ்சடிலப் புங்கவன்ற னருளென்ன
மின்பூத்த காரெழிலி விராய்ஞெமிர்ந்து திசைகுளிர்த்துக்
கொன்பூத்த புனல்பெய்யக் குளிர்பண்ணை செழித்தோங்குந்
தென்பூத்த வண்பொன்னிச் சென்னியனுள் பிறையாந்தில். ௧

ஒருமலத்தார்க் கிருளகற்று முத்தமன்மெய்ப் பராபரையே
டிருமலத்தார் வினைகழிப்ப விணைந்துபுவி தோற்றுவித்த
குருமலத்தார்ப் பொய்யாத குமரனிரு சரணமிசை
யிருமலர்த்தா ருறவிருபா விருபஃது விளம்பினனால். ௨

ஏற்றஞ்சால் கரச்சளப மெழிற்கலங்கொண் டெறிபுறக்கு
தோற்றஞ்சால் பேட்டைவயிற் றொன்மாலுந் தேடரிய
காற்றஞ்சால் கண்மணியைக் கரதலத்திற் கதிப்பக்கண்
டேற்றஞ்சா லப்பாசா மிக்குரிசிற் குயர்சூனு. ௩

மறைமுடிவாந் தேவாரம் வயங்குதிரு வாசகத்தே
னிறைமுடிவாஞ் சிவஞான சித்திமுத னிருமலனூல்
முறைமுடிவாக் கேட்டுணர்பு மொழிநின்ற வொழுக்கத்துக்
கறைமுடியுப் பிரசங்கங் கவினுஞ்செந் நாப்புலவன். ௪

எப்போது மாகமநூ லவைபடித்துப் பூர்வமெனச்
செப்போது மபரமெனத் திகழ்கிரியைப் பிரதிட்டை
யப்போது பிராயச்சித் தாந்தமவை நன்கறிந்து
முப்போது மருட்கடனா முன்னுசிவ யோகத்தான். ௫

மன்னியமா யூரேசர் மான்மியத்தி லனுட்டானந்
துன்னியவெல் லோன்பூசை துயர்நீக்குஞ் சிவபூசை
பன்னியவப் படலக்குப் பத்ததிசே ருரையியற்றித்
தன்னினிய வருள்மூத்துத் தாண்டவரா யன்றே. ௬

தில்லையாளி வித்துவசிரோன்மணி
ஸ்ரீ. து. ஷண்முகசெட்டியாரவர்கள்
இயற்றியருளிய

நூலாசிரியர் சிறப்பு.

குறுமுனியு மலைத்தவனுக் குருதா னென்றான்
கூரயிலோன் றன்னையொரு குமர னென்றான்
மறையாவு நாமகளு மகளே யென்றாள்
வானவருங் கண்டிறந்த வதன மானார்
நிறைமருவு சதுர்முகனும் பிரணவத்தைத்
தேர்ந்திடவே யோடிவந்தான் சிறைவிட் டன்றே
தரைபுகழும் புலவர்பிரா னமது முத்துத்
தாண்டவரா யக்கவிஞன் றன்னைக் கண்டே.

உ

சிவமயம்.

பிறைசைப் பொய்யா விநாயகர்

இருபாவிருபஃது.

மதிகொண்ட சேந்தன்கோ மால்பிருகு வேந்தன்
பதிகொண்ட சொல்லிற் படருங்—கதிகொண்ட
பொய்யாத வன்பார் புகலாம் பிறையாற்றிற்
பொய்யாத வன்பார் புகழ்.

புகழ்கொ டிவவியா ழகமீ திருத்திப்
பத்தர் முதலிய வத்திறந் திருத்திக்
குறும்போக்குப் போக்கி யிறும்பூது வடித்துக்
குற்றங் களைந்து செற்றமி லின்னிசை
யம்பொன்செய் குன்றக மம்பொன்செய் மடவார்
கின்னர மிதுனந் துன்னப் பாடி
யாடுகொடி நுடங்கிய பீடுகெழு பிறையாற்

றகரமு மிகர வுகர மகரச்
சிகரமு மென்னச் செழித்த தேவ
னறத்தான் வருவதூஉ மறத்தான் வருவதூஉ
மாகுங் கருணைச் சேகுங் கொண்டான்
றேற்றுபு கண்ட தொல்புவி முற்ற
மாற்றுபு முக்குண் ணுக்கி மாண்பவை
மூவரைப் படைத்து முரணி யவர்வேண்ட
மாவரை வந்த வக்கிர துண்ட
னாத னேம்ப வோர்மறை யவன்றன்
சித்தி புத்தியர் செங்கை பிடித்துச்
சித்தி யருளிய செம்மாப் புலவன்
கைடவற் காயக் கையடற் படையான்
மனத்தி லுன்னிய சினத்தலில் போதன்
றக்கன்வல் லாளன் றகுசீர் வீமன்
மிக்க விந்திரன் விரும்பு மேலவ
னையா தவருளம் பொய்யா விநாயகன்
துன்பந் துடைப்பன் மகிழூஉ
வின்பப் பணியணி யிளம்பிறை யானே. ௭

பிறையாறு கொண்ட பெருமான் றவிர்த்த
பிறையாறு கொண்ட பெருமான்—பிறையாறு
நந்தூர் தடமாட நம்பொய்யா நாயக
னிந்தூர் சடையா னிடம். ௮

இடமார் துறக்கத்து வடமார் கொங்கைச்
சசிதழீஇ யின்பந் தழீஇய வலாரி

பிசிதவிர் கபிலன் பெறத்தந்த மாமணி
கணனென் கருதலன் கணனடங்கக் கொள்ளச்
சித்தியை யேவிச் செறிபடை களைந்து
மழுவா லவற்செற்ற மாமுக நாதன்
திசைமுகன் பயந்த சிந்துர னீடிய
திசைமுகஞ் சவட்டித் திருமான் முதலத்
தேவர் வருத்திச் சிரமது கொய்ய
மூவரை யேவி முற்கயன் றலைகொடு
பூவலம் வந்து தாவியச் சிந்துரன்
சாந்தென மட்டித்த சாந்த நாயக
னல்லியந் தாமரை யகஞ்சிறை வண்டு
புல்லிவண் டெழுநறுப் பொய்கை கழிந்து
கருங்கான் மள்ளர் செய்கரை கட்டிய
தாவி யுந்திப் பாயத் துடவை
பூந்தாது மறிக்கும் பூந்தண் பிறைசைப்
பொய்யா விநாயகன் மெய்யாம் பதத்தை
முற்றக் கூறக் கற்றது பொய்யா
லாவிலை யொன்றிய வாக னிடத்து
மேனிலை யரியுற விலகிய சலசம்
பொருந்து நான்முகப் புங்கவன்
றிருந்திப் புகன்ற திருமா மறையே.

மறையின் முடிவு மதிவாணர் னெஞ்சு
நிறைவதென நின்ற தெவனே—பிறைசை

நவமே நல்மளிக்கும் பொய்யர்த நாத
சிவமே பதமென் சிரம். ௫

சிரமெனு மக்கரந் திசைமுகற் பெற்று
மரீசி வழுத்தி வரம்பெறு நன்னாட்
பங்கய மருங்குத் தங்கு வளை கண்டு
நெருங்குழி மடந்தை நிமலை யாகிப்
பெரும்பழி தவிர்க்கும் பெயரிய வல்லபை
மணந்தவக் காலத்துக் கணங்கொள் மாலவன்
மக்கள்பன் னிருவர் தக்கவ ரென்று
புணர்ந்து புயல்வண னுணர்ந்திட யோகம்
வழுத்திய பரிசாற் பழிச்சுவ லொன்று
வாண்மதி கிடந்த நாண்மலர்ப் பெரிய
மரைமலர் கொண்டு மறையவன் றனக்கும்
பாசங் கொண்டு நேச வருணற்கு
மாலை கொண்டு மால்புரு கூதற்கும்
வானருள் சுரந்த பானலங் கண்ணிய
கிரவுஞ்ச மூடிக வரவந் தங்கிய
விக்கினற் கடிந்த விக்கின ராய
பால சந்திர கோல மயூர
தூம கேது சோம மதோற்கட
வற்புத மியற்றுஞ் சிற்பர போக
சோம காந்தன் றுயர்தவிர்த் தாண்ட
வேம நாத விரணிய வண்ண

வுருக்கு மாங்கத னுயர்கிருச் சமதன்
செருக்கிய திரிபுரன் தேவர் கோமான்
சந்தி ராங்கதன் சதிர்களன் கர்த்தமன்
முந்திய கௌரி முருகன் செவ்வேள்
காசிப னகத்தியன் கருது மிராவணன்
பேசிய பரசி ராமன் பெயர்ச்சேய்
சூர சேனன் சுகிருத வீரிய
னூரி பாக னற்பிர சாதன்
போற்றும் பிறைசைப் பொய்யா விநாயக
வாற்றுங் கடையேற் கருண்மதி ஞான
மேற்றுமெற் கின்மக வளித்து மணந்து
சிற்றமில் போகத் திருவருட் டவத்தே.

தவமென வேட்டுத் தாணி யுழலு
மவமதி கேடி யறைகு—சிவமென்
பிறைசை புரியும் பெருங்கரி தாள்சொல்
துறைசை யகமாஞ் சுகம்.

சுகமுனி யீன்ற வகமுனி வியாதன்
றெழுதெழ வருள்செய் விழுத்தவ போற்றி
செயிர்தீர் மேனித் திருவொடும் பொலிய
மயின்மிசை வந்த மரகத போற்றி
மோதக மேந்திய சாதக போற்றி
சிங்கத் தமர்ந்த தங்கச் சிலைபா
யங்கத் தமிழ்மறை யருள்வோய் போற்றி

விடைகரும் புலைச்சிக்கு மேன்மை கொடுத்த
சடையணி தூர்வைச் சதிரவ போற்றி
திரிசிரன் பொருளு மொருசன கனருளும்
பரிவினிற் பெறத்தயை பாலித்தாய் போற்றி
வன்னிமந் தாரம் வழங்கினை போற்றி
கன்னிமாற் கரும்பவங் கழித்தாய் போற்றி
கரிபுணா ரமயங் கணபதி யாகிக்
கரிமுகற் கோட்டாற் கடிந்தூர்தி யென்னக்
கொண்ட புனித கொண்டல் போற்றி
துராசதன் வென்ற துண்டி விநாயக
தாரதல போற்றி தடங்கொள் பிறைசைக்
சராசல போற்றிநின் கருணைவேண் டுவனே. ௮

வேண்டேன் கயமலர் வெள்ளைக் கமலத்துக்
காண்டேன் பிறைசைக் கருங்களிறு—பூண்டேன்
றருமாலை யன்பன் றரிக்கத் தொடுத்தேன்
றருமாலை யின்பந் தனை. ௯

பந்தனை தணந்த சிந்தனை யகத்துஞ்
செஞ்சூட் டெகினந் திருந்திய விழைபினர்
பஞ்சூட் டடிநடைப் படிவங் குறைந்து
கயல்பாய் தடத்துக் கடியயர்ந் தனுராப்
பயில்தேன் பிலிற்றும் பழனப் பிறையாற்
றுணிப் பொன்கொ டமைத்தசெய் யகத்துங்
காணிக் குரிய கற்புடை மாந்தர்

கட்புலங் கதுவாக் காட்சி யெய்தி
விட்புல மறைத்த விந்திர விமானை
நிறையப் பொலிந்த கறைதீர் மேனிய
வல்லபை மணந்த மெல்லகப் பிரிய
வெழுமையு மெனையாள் புனிதன் பிருத
விழுமிய கேள்வி முனிவான் வகுத்த
தகைமைசால் கதிதரு முவமையில் பெரிய
பொல்லாக் குரம்பைப் புழுமலி யாக்கை
வெரீஇ மாசு கழீஇ பொரீஇ
நின்ற தன்மையரு நின்னி னருட்குக்
கைம்மாறு கொடுக்சக் கருதிற்
செம்மாப் புளதோ செப்புக பொருளே. ௧0

செப்பும் பொருளுந் தெரிந்தறி ராவடிகள்
செப்புந் தமிழ்ப்பிறைசைத் தேசிகதா—வப்பும்
புவியுங் கனலும் புதுகால் வெளியு
மவியும் பொழுதுமவி யாய். ௧௧

ஆய்மலர் கொடுநின் றாய்மலர் வழுத்தப்
பாந்தாமம் பெறுத லிறும்பூ தன்றேனு
மிறும்பூது பயக்கு நறும்பூண் சுமந்த
கணிகை கடுப்பக் கணிகை மலருங்
குறிஞ்சி முருக னுறிஞ்செயிற் பிறைசை
வளம்பதி படுத்தன் றுளம்பதித் திறைஞ்சக்
கானமர் வள்ளி மான வழங்கிய
யானை முகத்து ஞானத் தலைவ ௧௨

தலைமையாம் நூல்கற்றுத் தாளடங்கி நீத்துக்
கலைமைநூல் கொண்டு கலந்து—நிலைமை
நிறையாற்றிற் கொண்டார் செறித்தரோ நாயேன்
பிறையாற்றிற் பெற்ற களிறு. ௧௫

பெற்றமுங் களிறும் பெட்பொடு தம்வயி
னற்றத்து நின்றிங் காவண புரியினும்
பிழைபடு மல்ல லுழைவினை விக்கு
முடலக் கண்ண னுலகியற் போகங்
காணிற் பெரிதுங் கயத்ததென் றுன்னி
வெறுந்துணி யுடுத்து வெண்ணீ றணிந்து
கடைதொறும் பலியுழன் றடையினு முழுவன்
மறவாத் தகையே யிறவா வரமெனக்
கண்டகங் தெளிவார் கண்டையங் திரிபின்று
காட்சி யாதி யளவையிற் கண்டு
யுத்தியிற் றெளிந்தமெய் யுணர்ச்சி நாடிக்
கண்ணவை திறந்து கனவு நனவாப்
பற்றினர் பற்றினர் பற்றறு பற்றுக்
காதலன் பிழைத்த கருத்தாற் புலந்திங்
காதலின் றழன்ற வரிவை மகிழ்வான்
பாதம் பணிந்துழிப் பருமிதத் துணைமுலை
சாளரத் தாடித் தண்மதி காணூஉ
வாடாத் தோழி யணிமுக மெனூஉப்
பின்றாழ்பு நி[illegible]கும் பிறைசை நின்றவ

னவ்வைக் கருளிய செவ்வியற் புலவன்
ஞானக் குரவராஞ் சேனைத் தலைவர்தங்
குலத்துதித் தருளு நலத்தகைப் பெருமான்
குமார சுவாமி குமாரன் கவிகுரு
சாமிமால் வழுத்துஞ் சாமியந் தகையன்
பிளிறு சிந்துரக் களிற்றுச்
செம்பொற் பதமா மம்பொற் பதமே. ௧௪

பதமே யழித்த புரத்தார் பலர்தம்
பதமே யழித்த படையான்—சதமேப
வையா னனன்றெழுதா னுதலி னுற்பிறைசைக்
கையா னனன்றெழுவோங் காண். ௧௫

ஓமெனும் பொருளிற் றும்பொரு ளுணரா
தெறிதிரைப் பரவை யுடுத்த செறிபுவி
படைப்பனென் றெழுந்த பனவனு மாவினைப்
பிறன்வரை நின்றாள் பெரிது மயங்கி
யறன்வரை பிழைத்திங் கருஞ்சுர நின்று
கடலகம் புகுந்த வடுதிறற் கள்வனு
மெய்ப்பொரு ணிலையின் னிளவல் விரிப்ப
வப்பரம் பொருளுண ரத்தனுந் தேனிறும்
குடமுடைந் தோடப் படமுடை மால்பு
கடந்து குறவர் கருந்தே னெடுப்ப
நடந்து கும்பவாய் நாடிய கொள்ளப்
புன்னகை கோட்டிய வின்னெயிற்றுக் கொடிச்சி

மாட்டேக் கறுத்த வாட்டிற லொருவனும்
வழுத்தினர் னின்னையென் றுணர்த்துத லென்கட
ணம்பி யாண்டார் நம்பி வழுத்தப்
பம்பருட் பதிகமுஞ் சரிதமும் பரப்பி
மெய்கண் டார்க்கு மெய்யருள் பாலித்துக்
கபிலற் கின்னிசை யவையிற் காட்டிப்
பிரணவப் பொருளாய்ப் பெரும்புவி படைத்துச்
சிரவணப் பெரியர்தஞ் சென்னியிற் பொலிந்து
கிஞ்சுக வாயணு ரஞ்சொற் கிடைபாது
சுரிகுழற் பொற்றொடித் துணைமுலை மூர
விரிதரத் தளவரும் பெடுக்கும் பிறைசை
ஞான வாரண நடத்திய சான்றோர்
மோன வாரண முழுப்பொரு ளாயே. கசு

பொருளாகப் போற்றும் பொருளெல்லா மெங்கள்
பொருளாகப் போற்றப் பொலியு—மருளாளன்
காதல் கழுமியார் கற்றபொய் யாப்பிறைசை
நாதன் விழுமிய நூல். கஎ

ஆலமர் முழுமுதற் கோலமுந் தரித்துக்
கோல மாமுலைக் கொடிச்சியர் திறத்தா
லற்றவர்க் கற்றுப் பெரும்பொரு ளமைக்கு
முத்தமக் கவிஞர் கற்பகங் கலந்து
முருகு வீசு முண்மலர்க் கைதை
யருகுதண் பட்டத் தாடிய வநலார்

கண்கய லென்னக் கருதிய சிறுசிர
லலகி னேந்தி யருந்துபு செறிய்
விலகி வில்லுமிழ் புருவச் சிலையான்
மேனற் செலூஉம் பிறைசை யேவி
வீற்றிருந் தருளி வியன்புவி காப்பான்
தரும தத்தன் றருமவர்ச் சேர்ந்தான்
பொய்யா விநாயகன் மெய்யா விநாயகன்
சூற்றங் கடிந்து கூறுங் கடவுளர்
சுற்றம் விரும்புமெ னகஞ்சூழ்ந்து நிற்கத்
தேவர்க் கமுத மாவலி னூட்டிய
பாற்கடற் றோன்றிய மேற்குலத் திருவென்
கரமார் தலத்துங் கரகநீர்க் கையன்
செந்நா விருத்திய வந்நா மகளென்
மெய்ந்நா வகத்து மிளிர நின்றன
ராயிரம் பிறைதொழ மாயிரு ஞாலத்
தேத்தவு முளனியான் பாத்திறத் தேயே. கஅ

தேவர் வயத்தன்று சித்தர் வயத்தன்று
மூவர் வயத்தன்று முன்னுமிங்—கியாவர்க்குந்
தேனு டகங்காணுந் தேமாப் பிறையாற்றன்
மானு டகங்காணும் வாழ்வு கசு

வாழிய பெரிது வாழிய பெரிது
வாழிய பெரிது சீரிய ததனு
னேழுயர் மால்வரை யெருத்தம் பொலியும்

போழனார் கடிந்த புனைவலித் தடக்கைக்
கறைவேற் காளை காணுபு சிற்றிடை
நிறைவடந் தாங்கி நெருங்கிய பரூஉமுலை
வெள்வளைத் தோளியர் சேயரிக் கண்ணவன்
மருமத்துப் பாய மற்றவை குவளையென்
றருமது கொள்ள வரிபத முராலும்
பிறைசைப் பட்டப் பெருநகர்ச் சேர்ந்து
பாற்கட லன்ன நூற்கடல் புக்குப்
பாவலர் கூறிய நாவலர்ந் தெழுதுபு
காவல ரின்ப மேவி மாஅுப்
பொய்யா விநாயகன் பொன்னடி பணிந்து
மெய்யாக் கண்ட வியன்சீர் மதியே.

உ

பலவமயங்களிற்பாடிய

துதிகவிகள்.

சீர்பூத்த வகரமெனத் திருவாகி யோங்காரப்
பேர்பூத்த முதலாகிப் பிணிதவிர்க்குங் குருவாகிக்
கார்பூத்த பொழிற்பிறைசைக் கடவுளாய்க் கடையோமுக்
கோர்பூத்த வருள்வழங்கு மினியானைப் போற்றுதுமே. க

அளிகொண்ட வுமைதவத்து மருமுனியோம் பியதலத்துங்
களிகொண்ட பிறையாற்றிற் கடவுளா யவதரித்துத்
தெளிகொண்ட முற்றறிவுந் திருத்தொழிலு மாகியெமக்
கொளிகொண்ட சித்திபுத்தி யுவந்தானைப் போற்றுதுமே. ௨

சத்தியாய்ச் சிவமு மாகித் தனிப்பரம் பொருளாய் வேத
வத்துவாய் மணியாய்ச் செம்மை மாணிக்க மலையாய் ஞான
முத்தியாய்ப் பிறைசை மேய முழுமுதற் கடவு ளாகிச்
சித்திசேர் யானை யானைச் செறிகழல் வழுத்து வாமே. ௩

இழிகுல மதனிற் றோன்றி யிழிதொழில் புரிவா ரேனும்
பழுதறு பிறைசை மேவிப் பாட்டினாற் பாடு வாரேற்
குழைபவ ருருக்கி ஞானங் கோதற வழங்குஞ் சித்தி
தழைசிவ களிற்றி னானைத் தடங்கழல் வழுத்து வாமே. ௪

பிரமமெனாந் தனிப்பொருளாய்ப் பேசா ஞானப்
பிரணவமாய்ப் பேரொளியாய்ப் பெரிதாய் மன்னித்
தரணியாய்த் தத்துவமாய்ச் சித்து மாகிச்
சதாசிவமாய் மனோன்மணியாய்ச் சாந்த மாகி
வாமருளாம் பிறையாற்றிற் பொய்யா னாகி
வன்னமாய்க் கலையாகி வளர்வ தாகிப்
பரமனாங் கணேசனிரு தாளைப் பாடும்
பண்பினரே நண்பினராம் பண்பில் லேற்கே. ௫

..தியா யந்தமா யந்தத் தார்ந்த
வரும்பெருஞ்சோ தியுமாகி யனைத்து மாகி
யேதஞ்செ யாக்கர்குல மில்லா தாக
வின்னருள்செய் யானைமுகக் கடவு ளாகிக்
கோதறுத்த பிறையாற்றிற் பொய்யா னாகிக்
குறையிலனாய் நண்ணியசீர்ப் புனித னாகிப்
பாதுகைசேர் கணேசனிரு தாளைப் பாடும்
பண்பினரே நண்பினராம் பண்பில் லேற்கே.

ஒப்பில்தவஞ் செய்வார்தமக் கொளியாயருண் மல்கும்
தப்பில்பெரு மானேதனம் பொய்யாக்கண பதியே
யப்பும்புவி வளியுமனல் வெளியும்பிற நெறியுஞ்
செப்பும்பிறை யாற்றாயுனைச் சேரப்பிணி போமே.

அண்ணாவரு ளாளாவடி யவர்கட்கருள் வழங்குங்
கண்ணாபெரு மானேகணம் பொய்யாக்கண பதியே
யெண்ணாயினைப் பணிவார்நெறி பெறவேயருள் பிறைசைப்
பண்ணாபிறை யாற்றாயுனைப் பாடப்பிணி போமே.

திருவும் பொருளுந் தருவோய் சரணந்
திகழ்வோ யறிவோய் திறலோய் சரண
முருவு முயிரு மானாய் சரண
முணர்வு முளமு முவப்பாய் சரணந்

குருவுங் குலமுங் குணிப்பாய் சரணங்
குறையே தவிர்க்குங் குணமே சரணம்
பொருவும் பிணியுஞ் சிதைப்பாய் பிறைசைப்
பொய்யாக் கணபதி சரணஞ் சரணம் கூ

அருளாம் நிறைவே யன்பே சரண
மமலர்க் குதவு மரசே சரணம்
இருளாம் நெறிதீ ரிறைவா சரண
மெமையாள் பதியே கதியே சரணந்
தெருளாம் பொருளே தருவோய் சரணந்
திகழும் பொருளே புகழோய் சரணம்
பொருளாம் நிலையே சிவமே பிறைசைப்
பொய்யாக் கணபதி சரணஞ் சரணம். ௰

கண்ணே மணியே கலையே சரணங்
காணக் கிடையாக் கரும்பே சரணம்
விண்ணே வியப்பே விளக்கே சரணம்
விருப்பா யெமையாள் விமலா சரணந்
தண்ணேர் மதியே தாயே சரணம்
தந்தாய் நிதியே தந்தாய் சரணம்
புண்ணே தவிர்க்குந் தேவே பிறைசைப்
பொய்யாக் கணபதி சரணஞ் சரணம். ௰க

பாரார் நிலையே பகர்வாய் சரணம்
பதியே நிதியே கதியே சரணம்

நேரா வழியே நிலையே சரணம்
நிமலா வமலா நித்தா சரணங்
காரா மய்றீர் கடலே சரணங்
கலையே விலையேர் மணியே சரணம்
போராம் நெறிதீர் சிவமே பிறைசைப்
பொய்யாக் கணபதி சரணஞ் சரணம். ௰௨

பதியே நிதியே கதியே சரணம்
பசுவே பாச மறுப்பாய் சரணஞ்
சதியே தவிர்க்குந் தலைவா சரணஞ்
சரணம் புகுவார்க் கருள்வோய் சரணம்
மதியே மதிசார் பொருளே சரணம்
மன்னே மணியே மலையே சரணம்
பொதியே கலைதேர் திறமே பிறைசைப்
பொய்யாக் கணபதி சரணஞ் சரணம். ௰௩

உருவே சரண முறவே சரண
முளமே குடிகோ ளுளவே சரணம்
அருவே சரண மறிவே சரணம்
ஆனை முகத்தோ யன்பே சரணங்
கருவே சரணங் கடலே சரணங்
கருணைக் கடலா ரமுதே சரணம்
பொருளே சரணஞ் சித்தா பிறைசைப்
பொய்யாக் கணபதி சரணஞ் சரணம். ௰௪

பொய்யர்விநாயகர் நாமாவலி.

பிரணவப் பொருளே மாதேவா
பிழைபொறுத் தாண்டருள் வாவாவா. ௧

வருவான் வருவான் கணபதியே
தருவான் தருவான் குணநிதியே. ௨

கணபதி தனிச்சரண் கண்டோமே
கயமலம் யாவையும் விண்டோமே. ௩

கணபதி திருவுருக் கண்டோமே
கல்வியுஞ் செல்வமுங் கொண்டோமே. ௪

வாழ்வுந் திருவு மளிப்பவனே
வந்தான் கணபதி களிப்பவனே. ௫

கணபதி கணபதி கணபதியே
குணநிதி குணநிதி குணநிதியே. ௬

சத்திய ஞானக் கணபதியே
பத்திசெய் வோர்கட் குளபதியே. ௭

சித்தி மடப்பிடி சேர்ந்தவனே
திருவருள் தந்திடத் தேர்ந்தவனே. ௮

சிற்சபை யாருங் கணபதியே
திருவருள் வழங்குங் குணநிதியே. ௯

உறவே மெய்ப்பொருளே யொளி ருத்தம நற்கலையே
திறமே யிங்கருள்வாய் தெருட் சித்தி விநாயகனே:

பிருகுமாமுனிவர் திருவடிவாழ்க.

உ

சிவமயம்.

பிறைசைப் பொய்யா விநாயகர் கீர்த்தனைகள்.

ஷையூர் ம-ள-ள ஸ்ரீ

நா-பெருமாளுபாத்தியாயரவர்களும்

அவர்கள்குமாரர்

இராமச்சந்திரஉபாத்தியாயரவர்களும்

இயற்றியவை.

க. இராகம்-நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

தெரிசனஞ்செய்திடுவோம் பொய்யா விநாயகனை

அநுபல்லவி.

இருகரங் களையுமே சிரசினிற் குவித்தருள்
வரதனே பிரணவ சொரூபனே யென்று (தெரி)

சரணங்கள்.

ஐயன் பரமசுக மெய்யன் பிழையகற்றுந்
துய்யன் கரி[illegible]ர் கையனைக் கண்டு (தெரி)

நேச வடியர்ப[illegible]ள்ளியங்கிரி
யீசன் மகனல்[illegible] (தெரி)

நாற்றிசை யிலுமிக வேத்திப் பணியும்பிறை
யாற்றி னிகழ்கணேச மூர்த்தியைத் தானே. (தெரி)

---

௨. இ-ம்-யமுனகல்யாணி தெண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஓங்கணபதி சரணம்—அந்த
உம்பர்க ளின்பர்க ளன்பர்கள் போற்றிடும் ஓம்

அநுபல்லவி.

பாங்குடைப் பைந்தொடி வல்லபை நேசா
படிமிகப் புகழ்தரும் பிறைசையில் வாசா ஓம்

சரணம்.

செந்திரு மால்திரு மகள்மரு மகனே
சிவனர் மகனேபொய் யாவிநா யகனே
தேசம்பணிபரனே—கையினிற்
பாசாங் குசதரனே
கந்தனர் தமக்கு மூத்தவ னேப்ரதாப
கர்த்தநித்த சுத்தனே தாண்டவ ரூப ஓம்

மாங்கனிக் காவரனை வலம்வந்து நின்ருய்
மதகஜ முகமுள வசுரனை வென்ருய்
வள்ளலேமுகம் பாராய்—யானுமுன்
பிள்ளையெதிரே வா[illegible]
ஓங்குதும் பிக்கைய[illegible]யம்மைமுன் னேத்த
ஓடிச்சுங் தா[illegible]லசேர்த்த ஓம்

என்னிடர் தீர்ப்பது முனக்கொரு மலையா
ஏழைக் கருள்புரிய மனமிரங் கிலையா
இப்பராமுகமேனோ-சாமிக்கின்னஞ்
செப்புவதென்ன தானோ
தன்மை யுடனேவந்துன் சந்நிதி தனிலேத்தும்
தமியேன் றனைத்தயவா யாளு மெவரும் போற்றும்.

---

௫. இ-ம்-அங்குசதொனி-அட தாளம்,

பல்லவி.

வேழமுகத்தோனே உனதிருதாள் பணிந்தேன் யானே

அநுபல்லவி.

ஏழையென் மேல்க்ருபைசெய்திடவேண்டுமே
மூலமுதற்பொருளே நல்ல
வாழ்வையுந்தந்து மதிதந்து கேட்ட
வரத்தையுந் தந்தருளே. ஜய (வேழ)

சரணம்.

முக்கிய மாக வுனைப்பணிந் தேன்முதல்
மூர்த்தி கணபதியே சாமி
விக்னங்க ளேதும் வராமலே முன்னிற்க
வேண்டுந் தயாநிதியே ஜய (வேழ)

வானவர் தானவ ரானவ ராரும்
வணங்கிடு மைங்கரனே நிறை
ஞானப்ர வாகமே யெங்கும் விளங்கிடுந்
தீன தயாபரனே ஜய (வேழ)

காசினி தன்னிலுன் னன்பனாக காத்திடக்
கங்கணம் பூண்டவனே போற்றுந்
தாசன் றனக்குப்ர சன்ன மாகிவரந்
தாநீயென் றுண்டவனே ஜய (வேழ)

பூமி புகழும் பிறைசை நகருறை
பொய்யா விநாயகனே கன
நேம முடையதோர் சித்திக்கும் புத்திக்கும்
நேசா சிவன்மகனே ஜய (வேழ)

---

௬. இ-ம். இந்துஸ்தானி காப்பி ஆதிதாளம்.

தரு.

அரன்மகனே கரிமுகனே—என
தையனே மெய்யனே துய்யனேசெய்யருள்பொய்யாதவிநாயகனே

சரணமையா எனையாளும்—மிக
சத்திய நித்திய உத்தம வித்தக சித்திக்கு மணவாளனே அர

அண்டர்துயர் தீர்த்தவனே—ஒளி
ஐங்கர வெங்குமே தங்கி விளங்கிடு மங்களாம் பிகைபாலனே அர

விண்டுவின்றன் றிருமருகா—ஆதி
வேதனே நீதனே போதனே நாதனே மாதுவல் லபைநேசனே அர

திசைபுகழும் பிறைசையினில்—அன்பர்
தேடியே ஆடிடப் பாடிட நாடிய கோடுசைப் பிடித்தவனே அர

ரு இ-ம் காம்போதி — ஆதிதாளம்.

பல்லவி

நீமட்டுஞ் சிமிழ்போலக் கைவச மாகிவிட்டால்
நிகரெனக் கார்மனமே.

அநுபல்லவி

ஊமைய னுங்குளறு வாயனும் போல்மண்டை
யுள்ள வரையில்நமக் கிருவர்க்கு மேன்சண்டை (நீ)

சரணம்

ஐவ ரறுவர்செய்யுந் திருக்கெல்லா மடக்கலாம்
அமரும்நற் குணதெய்வ பக்தியாய் நடக்கலாம்
மெய்வளர் தர்மசாஸ் திரங்களைப் படிக்கலாம்
மேதினி யிற்கொண்ட விரதத்தை முடிக்கலாம் (நீ)

இகத்திற்கும் பரத்திற்கு மினவழி தேடலாம்
இயமன் றனக்குந்திரு நாமத்தைப் போடலாம்
தருங்கற்றோர் பெரியோர் சிநேகத்தைக் கொள்ளலாம்
சங்கட வினைமுதல் யாவையுந் தள்ளலாம் (நீ)

அறிவு கெட்டுப்பட்டி மேயுமா டுபோற்கட்டுக்
கடங்காம னிற்கிற துன்மார்க்கந் தனைவிட்டுப்
பிறரிக ழாமலிரு சகலமு நாமுறலாம்
பிறைசைப்பொய் யாவிநா யகனரு ளும்பெறலாம். (நீ)

சா. இ-ம்-இந்துஸ்தானி-கன்னடபியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

அம்புவி தனிலந்தத் தும்பி முகன்றனையே
நம்பித் துதித்துத்யானஞ் செய்மனமே.

அநுபல்லவி.

சம்ப்ரம மாகவே சந்தத மறவாமல்
சாது சற்சனர் களுட னேகூடி
உம்பர் முதலோர்போற்று முமையவள் பாலனை
யோங் கணபதி யரகர வெனவே (அம்)

சரணம்.

முன்செய்த தீவினை பின்செய்த வினைமிடி
முடுகும் பிணிக ளெல்லாம் பறந்திடவே
தன்கருணை விழியால் நோக்கி யருள்புரியுஞ்
சண்ட ப்ரசண்ட வாகு வாகனனை (அம்)

தக்கன்வல் லாளனிந் திரன்றேவர் சந்திராங்கன்
தருமாதி சேஷன் சோம காந்தனொடு
முக்ய விராவண னகத்தியன் காசிபன்
முதலோர்க்கு முத்தி வரந்தந் தவனை (அம்)

ஆகம வேத புராணங்கள் முறையிடு
அமலன் ரூபனை நித்ய வலங்க்ருதனை
யேக யோகவஸ்து வையெங்கும் நிறைந்தவனை
யெவரும் பணியும் பொய்யா விநாயகனை. (அம்)

எ. இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

எந்தத் துதிசெய்தாலு முந்திக் கணபதியைச்
சிந்தையில் நினை மனமே.

அநுபல்லவி.

அந்தரங்க பயபக்தி விசுவா சத்தோ
டருமறை களுந்தொழுங் கருண கரமூர்த்தியை (எ)

சரணம்.

ஆசைப் பிசாசுதனை யடித்துத் துரத்தியோட்டி
அல்லல் கவலைதுய ரகம்பாவங் களைவாட்டித்
தோசித் தனம்பல் துர்க்குணம் போகக்காட்டித்
தும்பி முகமாய்வந்த சுரூபஞா னனைநாட்டி (எ)

அண்டின பத்தர்களுக் களிக்கும் வரப்ரசாதன்
அறுமுக னுக்குமுன் னவதரித் திட்டநாதன்
விண்டு மருகனென விளங்கி வரும்விநோதன்
வேதவே தாந்தமுடி மேல்நின்ற பொற்பாதன் (எ)

வையம் புகழ்பிறைசை மாநகர்வாசனை
மங்கை யாகியமர்ந்த வல்லபை நேசனை
பொய்யாத விநாயக ஞானசர் வேசனை
புண்ய பராபர னெங்கும் பிரகாசனை. (எ)

அ. இ-ம்-தேசிகதோடி-அடதாளம்.

தரு.

பொய்யாவிநாயகனே என தையாகஜமுகனே
செய்யாள்மருமகனே மழுக் கையான்திருமகனே பொ

சித்திமணவாளா மங்கை புத்தியணைதோளா
நத்தியெனையாளா யல ரொத்ததிருத்தாளா பொ

அன்பர்பணிபரனே யவர்க் கின்பந்தரும்வரனே
பம்பிடுமைங்கரனே யுமை யம்பிகைபுத்திரனே பொ

நல்லோர்மனத்தெருளே யவை யல்லாதவர்மருளே
சொல்லார்மறைப்பொருளே நிறை செல்வமெனக்கருளேபொ

எங்குந்தொழுதேத்தி சொல்வி ளங்குமிகக்கீர்த்தி
தங்கும்பிறையாற்றி லமர் மங்களமாமூர்த்தி பொ

பதம்.

கூ. இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

கண்ணி.

சகியே கேளடி யின்றோர் கனவுகண்டேனே
சாமிக்கணபதி வந்தானே
மகிழ நானெழுந் திருந்தவன் முன்னின்றேனே
மலரடிபணிந்து வந்தேனே
ஐயன் றிருவழகை யறிந்திடலாமோ
அருமறைகளுஞ் சொல்லப்போமோ
தையலே யுனக்குநான் சாற்றுகின்றேனே
சரிவர வுறுதியாய்த்தானே
ஆகுவாகனமதி லமர்ந்ததோராரும்
அம்பொன்முடி யணிந்தசிரமும்
வாகுமந்தரமென வளர்ந்ததோர்புயமும்
மலர்ந்தவருள் விழியினயமும்
திருநீறணிந்துயிகச் சிறந்ததோர்நுதலும்
திலகமத்துடன் விளங்குதலும்
பெருமைபொருந்தமிகப் பிறங்குமுதரமும்
பேசற்கரிய வசிகரமும்
முன்னமௌவையைக்கைலை சேர்த்ததோர்கரமும்
முப்புரிநூலணிந்த வுரமும்
மன்னுங்கஜமுகனை வென்றதோர்படையும்

வயங்குவில்வமணிந்த சடையும்
பொன்னாைஞாண்தரித்த பூந்துகிலிடையும்
பூவுங்காங்காத மென்னடையும்
வன்னச்செவியி லொளிவளருங்குண்டலமும்
மருவுஞ்சந்த்ரமுக மண்டலமும்
பவளம்போன்றவதர வாயின்பரசமும்
பகைவர்நடுங்கும் பாசாங்குசமும்
தவளத்தாளம்போன்ற தந்தவரிசையும்
சற்சனசங்கத் திளில்நகையும்
வானோர்தினம்பரவி வணங்குபொற்பதமும்
வார்த்தையில்வருகு மிங்கிதமும்
மானார்விழிவல்லபை முதலிருபுறமும்
மருவவொளிருருப் பொன்னிறமும்
இவ்விதமகிமையோ டிருந்திடநானே
யின்பமவன்பேரிற் கொண்டேனே
அவ்விதசமையத்தில் விழித்துக்கொண்டேனே
யவனுமுடனே மறைந்தானே
அன்றுமுதற்பெரிய மையல்பூண்டேனே
அன்னந்தண்ணீர்கூட வேண்டேனே
இன்றுநீயழைத்துவா வென்மடமானே
இப்போதடையாளஞ் சொல்வேனே
ஆனபிறைசைநற்பொய்யா விநாயகனே
யாருஞ்சொல்வார் சிவன்றன்மகனே
ஏனின்னந்தாமசமா யிருக்கிறாய்தோழி
யிசைத்தேனுனக்கு மிகவாழி.

---

௧௦. இ-ம்-அடாணா-அட தாளம்.

பல்லவி.

தோழிவரக்காண்கிலேனேதோ அந்தத்
துய்யன்பிறைசையோன் பொய்யாவிநாயகனை

அநுபல்லவி.

நாழிகை யாகுமே நானென்ன செய்குவேன்
நாடிய மையலி லெப்படி யுய்குவேன் (தோ)

சரணம்.

அல்லி யசோகுநீ லஞ்சூத மாவெனு
மைங்கணை யால்மார னெஞ்சைப் பிளக்கிறான்
மெல்லியலே யிந்தத் துன்பம்நீங் கச்சந்த்ர
விம்பம்முக னின்பந்தரு மன்பன்றெரு கொம்பன்றனை. ()

நேற்றிராத் திரிமுன் னேரத்தில் வந்தென்றன்
நித்திரை நீங்கக்கை தட்டியென் மோகத்தை
மாற்றிய வனிப்போ தர்த்தசா மமாயும்
வாராததி யாரால்தடை நேரானதோ சிராயுமை. (தோ)

வல்லபை சித்தி புத்திமுத லோர்தங்கள்
மையற் கடலி லழுத்திவிட் டார்களோ
எல்லாந் தெரிந்திடும் நீபோ யறிந்துவா
இக்கணமே பக்கமுட னுச்சிதமாய் நச்சிடுமென். (தோ)

---

௧௧. இ-ம்-பைரவி-அடதாளம்

பல்லவி.

ஏனேவிந்த வாசை கொண்டாயடி பெண்ணே
யெனக்குச் சம்மதமே யில்லை.

அநுபல்லவி.

வானோர் புகழ்பிறைசைப் பொய்யா விநாயகன்றன்
வள்ள லறியாமலே யுள்ளந் தனிலுருகி எ

சரணம்.

மாயன்மக் கள்பன்னிரு வரையும் மணம்புணர்ந்தே
மரீசி முனிபெற்ற வல்லபை யையணைந்தே
ஏய மலரோன்றந்த சித்திபுத் திக்கிசைந்தே
யிவர்களால் நித்தமின்பப் படுகின்றானை மகிழ்ந்தே எ

அதிருக் கட்டுமின்னஞ் சொல்லுகின்றே னானே
ஐயோ வவன்றம்பி குறத்தியைச் சேர்ந்தானே
மதிகெட் டுறிதிருடி மாமனடி பட்டானே
வழியை விசாரிக்காம லின்ன மவன்மேல்தானே எ

ஒத்தவோ ரன்பன்றன் பிள்ளைதனை யிரத்த
மொழுக வறுக்கச்செய்த பொல்லாத கன்மனத்த
பித்துப் பிடித்தவனைப் பிச்சாண்டி தானளித்த
பேதைப் பிள்ளையைநம்பிப் பெருக்கமா கவேமெத்த. எ

கறுத்த முகன்சப்பாணிக் காலுடையோனை நாடிக்
கலங்குகி றாய்கொஞ்சமும் நாணமில் லாமல்வாடிப்
பொறுத்தி ரழகுமதன் தவறிப்போகின் றானேடி
புலிபசித் தாலுமென்ன புல்லைத்தின்னு மோபோடி. எ

பிறைசைப்

பொய்யாவிநாயகர் கும்மி.

மெய்யான கண்கண்ட தெய்வமடி யிந்த
மேதினிக் குள்ளாக மாபிறைசை
பொய்யா விநாயகன் பொற்பதந் தன்னையே
போற்றிநற் கும்மி யடியுங்கடி. (௧)

அந்த சிவனார் திருமகண்டி சொல்லு
மண்ணல் முகுந்தன் மருமகண்டி
கந்தற்கு முன்னே பிறந்தவண்டி யவன்
காரண கர்த்தனாய் வந்தவண்டி. (௨)

வல்லபை நாயக னானவண்டி ஆகு
வாகனந் தன்னை யுடையவண்டி
வெல்லக் கூடாத கஜமுகா சூரனை
வென்றவண்டி வெற்றி கொண்டவண்டி. (௩)

தீராத வல்வினைத் தீர்ப்பவண்டி நிறை
செல்வப் பொருளைத் தருபவண்டி
வாராத வாபத்து வந்தா லும்மதை
வந்துதான் முன்னின்று தீர்ப்பவண்டி. (௪)

வேண்டிக்கொண் டார்சள் கவிதீர்ப் பேனென்று
வித்தகக் கங்கணம் பூண்டவண்டி,
தாண்டவ மூர்த்தியே யிச்சுரூ பம்மெனத்
தாமறி யாதவ ரில்லையடி. (௫)

தந்தைதகை மாங்கனிக் காகப்பண் டேயிவன்
றம்பிவலஞ்சுற்றி வந்தாண்டி
முந்தி யதற்குள்ளே சூக்ஷ்ம மாய்ப்போற்றி
முக்யமாய்த் தான்பெற்றுக் கொண்டாண்டி (௬)

எங்கு நிறைந்ததோர் வஸ்துவடி யிவ
னில்லா விடமுமெது தாண்டி
தொங்குந் தும்பிக்கை யுடையவ னாகிய
தொந்திக் கணபதி யான்றாண்டி (௭)

சர்க்கரை மோதகந் தேங்கா யவலொடு
சார முள்ளகனி வர்க்கங்களு
முக்கிய மாக மிகப்பிரி யத்துடன்
முந்தி யாராதனை யேற்பவண்டி. (௮)

தேவ னிவற்குநற் பூசைகளை வேத்தியஞ்
சிங்கார மாகத் தினம் நடக்கும்
யாவரும் போற்றிட வாண்டாண்டு வந்திடு
மாவணித் திங்கள் சதுர்த்தியினில். (௯)

சீருள்ள பத்துநா ளுற்சவத் தோடுநற்
சிறப்புப் பொருந்தக் குதூகலமாய்த்
தேருந் திருவிழா வூருஞ் செழிக்கவே
செவ்வை யதாக நடக்குமடி. (௧௦)

இப்படியாக நடப்பது மல்லாம
லின்னம் முடிவினி லேயொருநாள்
தெப்பத் திருவிழா வேடிக்கை செய்திடுஞ்
சிங்காரந் தன்னைப் புகழுங்கடி. (௧௧)

சேனைக் குலத்துக் குமாரசா மிக்குநற்
செல்வன் கந்தரு சாமி யென்போன்
ஆனவிக் கோயிலுக் கன்பாய் நடத்திட
லாகும் விசாரணைக் கர்த்தனடி. (௧௨)

ஆசிரியவிருத்தம்.

ஐயாவி னாயகற்குந் திசைமறைக்கு மிசைநிறைக்கு
மடியவர்க்கும்
மெய்யாவி னாயகருள் புரியரிக்கும் விரிஞ்சனுக்கும்
விண்ணோருக்குஞ்
செய்யாவி னாயகுபோன் மணிமாடப் பிறைசையினிற்
றிகழுந் தெய்வப்
பொய்யாவி னாயகற்கும் புகழ்வோர்க்கும் மங்களமே
பொலிக மாதோ.

ச மா ப் த ம்.